**தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 10.5.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி துணை நிற்பது போல், உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாக விளங்குவது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

இதனை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கல்விக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வருகிறது. சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் முழுமையான பயிற்சி அளித்தல்; பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல்; உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல்; ஊக்கத் தொகை அளித்தல்; போன்ற பல்வேறு முனைப்பான திட்டங்கள் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் கிராம இளைஞர் மேம்பாட்டு விளையாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை சிறந்த முறையில் பராமரித்து பயன்படுத்திடும் வகையிலும், கிராம மக்களிடையே விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்திடும் வண்ணமும், ஆண்டு ஒன்றுக்கு 25 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிய தடகளப் போட்டிகளை இந்தியாவில் நடத்திட ஆசிய தடகள கழகம் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இந்திய தடகள சம்மேளனம், ஆசிய தடகளப் போட்டிகளை 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில், தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் நடத்திட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போட்டிகளில் 44 நாடுகளைச் சார்ந்த தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்தப் போட்டிகளை சிறப்புற நடத்திட சென்னை நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை மாற்றியமைக்கப்படுவதோடு, புதிய பயிற்சி செயற்கை இழை தடகள ஓடுபாதை ஒன்றும், அதாவது Warm up Track அமைக்கப்படும்; தற்போதுள்ள வசதிகள் அனைத்தும் உலக தரத்திற்கு உயர்த்தப்படும்; சர்வதேச தரத்திலான உபகரணங்கள் வாங்கப்படும். மேலும் இப்போட்டிகளில் பங்கு பெறும் அனைத்து பன்னாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதற்காக 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******